**OPEN ACCESS**

Manuscript ID: TAM-10032026-10032

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.10.2025

Accepted: 12.12.2025

Published: 01.01.2026

Citation:
Vimalaraj, Alagiah. "Beyond the Stage: Tanja Beer's Theory of 'Ecoscenography' and Its Feasibility in Tamil Theatre." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 29–40.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10032

*Corresponding Author:
vimalaraj72@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Beyond the Stage: Tanja Beer's Theory of 'Ecoscenography' and its Feasibility in Tamil Theatre

**Dr. Alagiah Vimalaraj**
*Senior Lecturer, Department of Dance and Drama*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies*
*Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0000-0003-2100-5209*

**Abstract**

*In the current 'Anthropocene' era, where global warming and ecological shifts pose a threat to human existence, ecological accountability within the arts has become indispensable. In the realm of modern Tamil theatre scenography, there has been a recent surge in the use of non-biodegradable materials such as Polystyrene (Rigid Foam), plastics, and chemical paints, fostering a 'disposable culture'. This trend is detrimental both ecologically and economically. This study explores the feasibility of implementing Australian designer Tanja Beer's theory of 'Ecoscenography' within the context of Tamil theatre. The theory advocates for transforming stage design from a mere decorative artifact into an ecological event integrated with the environment. Employing a qualitative research methodology, this study analyzes Tanja Beer's three theoretical stages—'Co-creation', 'Celebration', and 'Circulation'—through a comparative analysis with traditional Tamil theatre forms, such as Koothu, and contemporary theatrical endeavors. The study concludes that while this theory originates from the West, it shares intrinsic values with the traditional material culture of Tamil theatre. Furthermore, it establishes that the utilization of local, sustainable resources offers a viable solution to significantly reduce production costs while ensuring environmental sustainability.*

***Keywords:*** *Ecoscenography, Sustainability, Tamil Theatre, Material Turn, Zero-waste Theatre, Tanja Beer.*

## References

1. Ramaswamy, M. (1995). Tamil Nadagam: Netrum Indrum [Tamil Drama: Yesterday and Today]. Chennai: Kalaignan Pathippagam.
2. Mounaguru, S. (1997). Eezhathu Tamil Nadaga Arangu [Eelam Tamil Theatre]. Colombo: Kumaran Book House.
3. Beer, T. (2016). Ecoscenography: An Introduction to the Art of Scenography for a More-Than-Human World. Broadview Press.
4. Beer, T. (2021). Ecoscenography: An Introduction to the Art of Scenography for a More-Than-Human World. Palgrave Macmillan.
5. Bennett, J. (2010). Vibrant Matter: A Political Ecology of Things. Duke University Press.
6. Chaudhuri, U. (1994). "There Must Be a Lot of Fish in That Lake": Toward an Ecological Theater. Theater, 25(1), 23-31.
7. Julie's Bicycle. (2023). Culture Change: Climate impacts of the UK theatre sector. London: Arts Council England.

8. Kershaw, B. (2007). Theatre Ecology: Environments and Performance Events. Cambridge University Press.
9. May, T. J. (2005). Greening the Stage: Sustainable Production Practices and Ecological Values in American Theatre. (Doctoral dissertation, University of Washington).
10. McKinney, J., & Palmer, S. (2012). Scenography Expanded: An Introduction to Contemporary Performance Design. Bloomsbury Methuen Drama.
11. Schechner, R. (1988). Performance Theory. Routledge.
12. Thompson, J. (2009). Performance Affects: Applied Theatre and the End of Effect. Palgrave Macmillan.

# மேடைக்கு அப்பால்: டான்யா பீரின் 'சூழலியல் காட்சியமைப்பியல்' கோட்பாடும், தமிழ் நாடக அரங்கில் அதன் சாத்தியப்பாடுகளும்

***கலாநிதி அழகையா விமலராஜ்***
முதுநிலை விரிவுரையாளர், நடன நாடகத்துறை
சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**
*பூகோள வெப்பமடைதல் மற்றும் சுழலியல் மாற்றங்கள் மானுட இருப்பை அச்சுறுத்தி வரும் 'மானுடப் பேரூழிக்காலத்தில்', கலைத்துறையின் சூழலியல் பொறுப்புக்கூறல் இன்றியமையாததாகின்றது. நவீன தமிழ் நாடக அரங்கின் காட்சியமைப்பு முறைகளில், அண்மைக்காலமாக பாலிஸ்டிரீன் (Rigid Foam), நெகிழி (Plastic) மற்றும் இரசாயன வர்ணங்கள் போன்ற மட்காத பொருட்களின் பயன்பாடு அதிகரித்து, 'பயன்படுத்தி எறியும்' கலாசாரம் மேலோங்கியுள்ளது. இது சூழலியல் சார்ந்தும் பொருளாதார அடிப்படையிலும் ஆரோக்கியமற்ற போக்காகும். இவ்வாய்வானது, அவுஸ்திரேலிய வடிவமைப்பாளர் டான்யா பீர் முன்வைக்கும் 'சூழலியல் காட்சியமைப்பியல்' (Ecoscenography) கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, அதனைத் தமிழ் நாடகச் சூழலில் பிரயோகிப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்கிறது. மேடை வடிவமைப்பை வெறும் அலங்காரப் பொருளாகக் கருதாமல், சூழலுடன் இணைந்த செயற்பாடாக மாற்றியமைப்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. பண்புசார் ஆய்வு முறையைப் பின்பற்றும் இவ்வாய்வு, டான்யா பீரின் கோட்பாட்டு நிலைகளான இணை-உருவாக்கம், கொண்டாடல், சுழற்சி ஆகியவற்றைத் தமிழர்களின் மரபுவழி அரங்குகளான கூத்து மற்றும் நவீன நாடக முயற்சிகளுடன் ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்கிறது. மேலைத்தேயச் சூழலில் உருவான இக்கோட்பாடு, தமிழர்களின் பாரம்பரியப் பொருள்சார் கலாசாரத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்பதையும், உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதாரச் செலவை வெகுவாகக் குறைக்க முடியும் என்பதையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *சூழலியல் காட்சியமைப்பியல், நிலைபேறான தன்மை, தமிழ் நாடக அரங்கு, பொருள் சார் திருப்பம், கழிவற்ற அரங்கு, டான்யா பீர்.*

## ஆய்வுப் பிரச்சினை

நவீனத் தமிழ் நாடகப் பரப்பில், குறிப்பாகப் பல்கலைக்கழக நாடகங்கள், மாநில மற்றும் தேசிய அளவிலான நாடகப் போட்டிகள், மற்றும் பெரும் வர்த்தக மேடையாக்கங்களில், காட்சியழகு சார்ந்த அக்கறை அதிகரித்துள்ளது. மேடைப் பிரம்மாண்டத்தைக் காட்டுவதற்காகப் பாலிஸ்டிரீன், பிளாஸ்டிக், நெகிழிப் பதாகைகள் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த வர்ணங்கள் கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு மணி நேர நாடகத்திற்காக மாதக்கணக்கில் உருவாக்கப்படும் இந்தப் பிரம்மாண்டமான மேடைப் பொருட்கள், நாடகம் முடிந்த மறுகணமே 'குப்பைகளாக' மாற்றப்படுகின்றன. இவை பெரும்பாலும் எரிக்கப்படுகின்றன அல்லது நீர்நிலைகள் மற்றும் நிலங்களில் கொட்டப்படுகின்றன. கலைப்படைப்பு ஒன்றின் உருவாக்கமானது சூழலுக்குக் கேடு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்வதாக அமைவது முரண்நகைக்குரிய செயற்பாடாகும்.

இச்சூழலில், டான்யா பீர் முன்வைக்கும் சூழலியல் காட்சியமைப்பியல் கோட்பாடு, நவீனத் தமிழ் நாடக அரங்கின் அழகியல் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்கு எவ்வகையான தீர்வுகளை வழங்கப் போகிறது? இது சாத்தியமானதா? என்பதே இவ்வாய்வின் மையப் பிரச்சினையாகும்.

## ஆய்வின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள்

இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் நிலவும் பொருளாதார நெருக்கடி மிகுந்த சூழலில், கலை உற்பத்திச் செலவைக் குறைப்பது அவசியமாகிறது. இறக்குமதி செய்யப்படும் விலையுயர்ந்த இரசாயனப் பொருட்களுக்கு மாற்றாக, உள்ளூரில் கிடைக்கக்கூடிய, மீளப் பயன்படுத்தக்கூடிய வளங்களைக் கொண்டு மேடையமைப்பதற்கான சாத்தியங்களை ஆராய்வது இவ்வாய்வின் காலத் தேவையாகும்.

## இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

1. டான்யா பீரின் சூழலியல் காட்சியமைப்பியல் கோட்பாட்டின் தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பரிமாணங்களைத் தெளிவுபடுத்துதல்.
2. தற்காலத் தமிழ் நாடக மேடை வடிவமைப்பில் ஏற்படும் சூழலியல் மாசுகள், பொருள் விரயம் மற்றும் பொருளாதார இழப்புகளை இனங்காணல்.
3. தமிழர்களின் மரபுவழி அரங்கில் காணப்பட்ட சூழலியல் கூறுகளை மீட்டெடுத்து, நவீன அரங்கில் பிரயோகிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

## ஆய்வு முறைமைகள்

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறையை (Qualitative Methodology) அடிப்படையாகக் கொண்டது. சூழலியல் காட்சியமைப்பியல் என்பது ஒரு தத்துவார்த்த மற்றும் நடைமுறைச் செயற்பாடு என்பதால், இதனைப் புரிந்து கொள்வதற்கு விளக்கமுறைப் பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன.

## தரவு சேகரிப்பு

டான்யா பீரின் அடிப்படை நூல்கள், ஜேன் பென்னட் (Jane Bennett) போன்றோரின் 'பொருள்சார் திருப்பம்' சார்ந்த கோட்பாட்டு நூல்கள் முதன்மைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஈழத்து மற்றும் தமிழக நவீன நாடக மேடைப் பொருட்கள் பயன்பாடு, மற்றும் நாடக முடிவில் அப்பொருட்களின் நிலை ஆகியன அவதானிப்பு மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் ஆராயப்படுகின்றன.

## ஆய்வு எல்லை

இவ்வாய்வானது ஈழத்து மற்றும் தமிழகத் தமிழ் நாடக அரங்குளை மையமாகக் கொண்டதுடன், 'காட்சியமைப்பியல்' மற்றும் 'மேடைப் பொருட்கள்' ஆகியவற்றை மட்டுமே தனது பிரதான ஆய்வு எல்லையாகக் கொண்டுள்ளது.

## அறிமுகம்

### பின்னணி

21ஆம் நூற்றாண்டு மனித குலத்திற்குச் சூழலியல்ரீதியாகப் பெரும் சவால்களை விடுத்துள்ளது. காலநிலை மாற்றம், வளங்களின் பற்றாக்குறை மற்றும் கழிவு முகாமைத்துவப் பிரச்சினைகள் என்பன அறிவியல் உலகை மட்டுமல்லாது, கலையிலக்கிய உலகையும் சிந்திக்கத் தூண்டியுள்ளன. இந்த உலகளாவிய சூழலியல் சிந்தனையின் நீட்சியாகவே நாடகத்துறையில் பசுமை அரங்கு மற்றும் சூழலியல் நாடகம் எனும் கருத்தாக்கங்கள்

முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. நாடகம் என்பது சமூகத்தின் கண்ணாடி என்று கூறப்பட்டாலும், அந்த நாடகத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் சூழலைச் சிதைப்பவையாக இருக்குமாயின், அக்கலை வடிவம் தனது தார்மீகப் பொறுப்பிலிருந்து தவறுகிறது என்ற விமர்சனம் மேலைத்தேய அரங்கில் வலுப்பெற்றுள்ளது.

## கலாநிதி டான்யா பீர்: அறிமுகம்

டான்யா பீர் (Dr. Tanja Beer) என்பவர் சர்வதேச அளவில் அறியப்பட்ட சூழலியல் வடிவமைப்பாளர் மற்றும் அவுஸ்திரேலியாவின் கிரிஃபித் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றும் ஒரு கல்வியாளர் ஆவார். நாடகத்துறையில் ‘பசுமை’ என்ற சொல்லாடலுக்கு அப்பால் சென்று, ‘சூழலியல் காட்சியமைப்பியல்’ (Ecoscenography) என்ற புதிய கலைச்சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் இவரே. 2016ஆம் ஆண்டு மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் இவர் மேற்கொண்ட முனைவர் பட்ட ஆய்வே, இக்கோட்பாட்டின் அடிப்படையாகும். இவர் எழுதிய “Ecoscenography: An Introduction to the Art of Scenography for a More-Than-Human World” (2021) எனும் நூல், 21ஆம் நூற்றாண்டு நாடக அரங்கிற்கான சூழலியல் வழிகாட்டியாகக் கருதப்படுகிறது. இவர் வெறும் கோட்பாட்டாளராக மட்டுமன்றி, “தி லிவிங் ஸ்டேஜ்” (The Living Stage) எனும் உலகப்புகழ் பெற்ற செயற்றிட்டத்தின் மூலம், உயிருள்ள தாவரங்களைக் கொண்டு மேடையமைத்து, நாடக முடிவில் அவற்றை உணவுப் பொருட்களாகவும் கன்றுகளாகவும் சமூகத்திற்கு வழங்கும் நடைமுறை வாதியாகவும் திகழ்கிறார்.

## சூழலியல் காட்சியமைப்பு

டான்யா பீரின் வரைவிலக்கணப்படி, சூழலியல் காட்சியமைப்பியல் என்பது ‘காட்சியமைப்புச் செயற்பாட்டின் அனைத்து நிலைகளிலும் சூழலியல் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்” ஆகும். இது மேடை வடிவமைப்பை வெறும் அலங்காரப் பொருளாகப் பார்ப்பதைத் தவிர்த்து, அதனைச் சூழலுடனும் சமூகத்துடனும் ஊடாடும் நிகழ்வாகப் பார்க்கிறது.

பொதுவாகப் ‘பசுமை அரங்கு’ என்பது சூழலுக்கு ஏற்படும் தீங்கைக் குறைப்பதை மட்டுமே நோக்கமாகக்கொண்டது. ஆனால், டான்யா பீர் முன்வைக்கும் ‘சூழலியல் காட்சியமைப்பியல்’ அதனிலும் மேம்பட்டது. இது தீங்கைக் குறைப்பதோடு நின்றுவிடாமல், சூழலுக்கு நன்மை செய்வதை இலக்காகக் கொண்டது. அதாவது, நாடகத்திற்காக உருவாக்கப்படும் காட்சியமைப்பு, மேடைப் பொருட்கள் போன்றவை நாடகம் முடிந்த பின்னர் குப்பையாக மாறாமல், அது உரமாகவோ, உணவாகவோ அல்லது சமூகத்திற்குப் பயன்படும் மறுசுழற்சிப் பொருளாகவோ மாற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மனிதர்களுக்கு மட்டுமேயான நாடக உலகை விரிவுபடுத்தி, மனிதர்களோடு தொடர்புடைய ஏனைய உயிரினங்களையும், பொருட்களையும் உள்ளடக்கிய ‘மனித-மையமற்ற’ ஒரு உலகாக மேடையைக் கட்டமைப்பதே இதன் சாராம்சமாகும்.

## மரபிலிருந்து மாற்றம்

வழக்கமான காட்சியமைப்பியல் மற்றும் சூழலியல் காட்சியமைப்பியல் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

**மையப் புள்ளி:** மரபார்ந்த காட்சியமைப்பியல் ‘மானுட மையவாதம்’ (Anthropocentrism) கொண்டது. இது மனிதக் கதைக்காகச் சூழலைச் சுரண்டுகிறது. ஆனால், சூழலியல் காட்சியமைப்பியல் ‘சூழல் மையவாதம்’ (Ecocentrism) கொண்டது. இது சூழலின் நலனை முன்னிறுத்திக் கலையைப் படைக்கிறது.

**பொருள் பயன்பாடு:** மரபார்ந்த முறையில் பயன்படுத்தி எறியும் (Take-Make-Waste) நேர்கோட்டுப் பொருளாதார முறைமை பின்பற்றப்படுகிறது. இங்கு மேடைப் பொருட்கள் நாடக முடிவில் கழிவுகளாகின்றன. மாறாக, சூழலியல் காட்சியமைப்பில் 'சுழற்சிப் பொருளாதார' முறைமை பின்பற்றப்படுகிறது. இங்கு ஒரு பொருளின் முடிவு, அடுத்ததன் தொடக்கமாக அமைகிறது (Cradle-to-Cradle).

**வடிவமைப்பாளர் மனநிலை:** மரபார்ந்த முறையில் வடிவமைப்பாளர் தனது தனிப்பட்ட திறமையைக் காட்டுவதற்காகச் சூழலை ஆக்கிரமிக்கிறார் இதனை டான்யா பீர் 'சுயநலக் காட்சியமைப்பியல்' (Ego-scenography) என விமர்சிக்கிறார். ஆனால் சூழலியல் முறையில், வடிவமைப்பாளர் இயற்கையுடனும், வளங்களுடனும் இணைந்து 'இணை-ஆசிரியராக' செயற்படுகிறார்.

**அழகியல்:** மரபார்ந்த முறை பளபளப்பான, செயற்கையான, நிறைவு செய்யப்பட்ட அழகியலை விரும்புகிறது. சூழலியல் முறையோ, பொருட்களின் இயல்பான தன்மை, சிதைவு மற்றும் மறுசுழற்சி ஆகியவற்றில் உள்ள இயற்கை அழகியலைக் கொண்டாடுகிறது.

## தமிழ் நாடக அரங்கில் இக்கோட்பாட்டின் தேவைப்பாடு

நவீனத் தமிழ் நாடகப் பரப்பில் இக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் மூன்று முக்கிய காரணிகளால் உந்தப்படுகிறது:

### பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு

இலங்கை மற்றும் தமிழகச் சூழலில், நாடகத் தயாரிப்புச் செலவுகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, பாலிஸ்டிரீன், ஒட்டுபசை மற்றும் வர்ணங்கள் போன்ற இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையேற்றம் நாடகக் குழுக்களுக்குப் பெரும் சுமையாகும். உள்ளூரில் இலவசமாக அல்லது மலிவாகக் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் (அட்டைப் பெட்டிகள், பழைய துணிகள்) மற்றும் இயற்கை வளங்களைக் (மூங்கில், சணல்) கொண்டு மேடையமைக்கும் சூழலியல் காட்சியமைப்பியல், பொருளாதாரரீதியில் மிகவும் சிக்கனமான மற்றும் சாத்தியமான மாற்றீடாகும்.

### கழிவு கலாசாரத்தை மீட்டெடுத்தல்

சமகாலத் தமிழ் நாடகப் போட்டிகளிலும், பாடசாலை நாடகங்களிலும் பாலிஸ்டிரீன் பயன்பாடு ஆபத்தான அளவை எட்டியுள்ளது. ஒரு மணி நேர நாடகத்திற்காக உருவாக்கப்படும் பிரம்மாண்டமான செயற்கை காட்சியமைப்புக்கள் மற்றும் மேடைப்பொருட்கள், அடுத்த கணமே நச்சுப் புகையாகவோ அல்லது நிலத்தை நிரப்பும் குப்பையாகவோ மாறுகின்றன. இக்கலாசாரத்தை மாற்றி, தமிழர்களின் மரபுவழி அரங்கான கூத்தில் இயல்பாகவே இருந்த 'கழிவற்ற' மேடைப் பண்பாட்டை மீட்டெடுப்பதற்கு இக்கோட்பாடு அவசியமாகிறது.

### புதிய அழகியல் தேடல்

தமிழ் நாடகம் உள்ளடக்கம் சார்ந்து அரசியல் மற்றும் சமூக மாற்றங்களைப் பேசினாலும், அதன் வடிவம் இன்னும் பழைய செயற்கைத்தன்மையிலேயே தேங்கிக் கிடக்கிறது. சூழலியல் காட்சியமைப்பியல், தமிழ் நாடக மேடைக்கு புதிய, மண் சார்ந்த, பொருள்சார் அழகியலை அறிமுகப்படுத்த உதவும். இது பார்வையாளர்களுக்குப் புதியதொரு காட்சி அனுபவத்தை வழங்குவதோடு, சூழலியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும்.

## இலக்கிய மற்றும் கோட்பாட்டு மீளாய்வு

இப்பகுதியானது டான்யா பீரின் கோட்பாட்டை உலகளாவிய தத்துவார்த்தப்

போக்குகளுடன் இணைத்து விரிவாக ஆராய்கிறது. குறிப்பாகப், 'பொருள்சார் திருப்பம்' மற்றும் "சூழலியல் அறம்" (Ecological Ethics) ஆகியன இக்கோட்பாட்டின் அடித்தளமாக அமைவதை இது விளக்குகிறது.

## மானுட மையவாதத்திலிருந்து சூழல் மையவாதத்திற்கு

பாரம்பரிய நாடகக் கோட்பாடுகள், அரிஸ்டாட்டில் காலம் தொட்டு, நடிகரையும், மனிதக் கதையையுமே மையப்படுத்தின. இதில் 'மேடைச் சூழல்' என்பது மனிதன் இயங்குவதற்கான ஒரு ஜடப் பின்னணியாக மட்டுமே இருந்தது. இதனை 'மானுட மையவாதம்' எனலாம். ஆனால், 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தத்துவத்துறையிலும் கலைத்துறையிலும் ஏற்பட்ட 'பொருள்சார் திருப்பம்' இக்கருத்தியலைத் தலைகீழாக மாற்றியது.

ஜேன் பென்னட் தனது 'துடிப்பான ஜடப்பொருள்' எனும் நூலில், 'பொருட்கள் என்பன உயிரற்றவை அல்ல. அவற்றுக்கும் ஒரு செயல்திறன் உண்டு' என்று வாதிடுகிறார் (Bennett, 2010, p. viii). இச்சிந்தனையின் வழியே நாடகத்தை அணுகிய ஜோஸ்லின் மெக்கின்னி ஸ்காட் பால்மர் போன்ற அறிஞர்கள், 'மேடைப் பொருட்களுக்குச் சொந்தமாக ஒரு கருத்துருவாக்கம் உண்டு. அவை மனித நடிகருக்குச் சமமாக மேடையில் இயங்குகின்றன' என்று நிறுவுகின்றனர் (McKinney & Palmer, 2012, p. 14). இதன் நீட்சியாகவே, உனா சௌத்ரி 'நாடகச் சூழலியல்' என்ற பதத்தை அறிமுகப்படுத்தினார்.

நாடக அரங்கிற்கும் இயற்கைக்கும் இடையே உள்ள பிரிவினையை அவர் 'ஐந்தாம் சுவர்' என்று விமர்சித்தார் (Chaudhuri, 1994, p. 23). அதாவது, நான்காம் சுவர் நடிகனுக்கும் பார்வையாளனுக்கும் இடையில் இருப்பது போல, ஐந்தாம் சுவர் அரங்கிற்கும் சூழலுக்கும் இடையில் உள்ளது. அதனை உடைப்பதே சூழலியல் அரங்கு.

## டான்யா பீரின் 'சூழலியல் காட்சியமைப்பியல்': கோட்பாட்டு விளக்கம்

மேற்கூறிய தத்துவார்த்தப் பின்னணியில், டான்யா பீர் காட்சியமைப்பியலை 'மனிதர்களுக்கு அப்பாற்பட்ட உலகிற்கான கலை' என்று வரையறுக்கிறார் (Beer, 2021, p. 5). இது மேடை வடிவமைப்பை ஒரு 'கலைப்பொருள்' என்பதிலிருந்து 'சூழலியல் நிகழ்வு' என்பதை நோக்கி நகர்த்துகிறது. இக்கோட்பாடு மூன்று அடிப்படை நிலைகளைக் கொண்டுள்ளது:

1. இணை-உருவாக்கம் (Co-creation - Pre - production):

வழக்கமான காட்சியமைப்பில் 'வடிவமைப்பாளர்' என்ற தனிநபர் அதிகாரமே மேலோங்கியிருக்கும். அவர் வரைந்த படத்திற்கு ஏற்ப பொருட்கள் வாங்கப்படும். ஆனால் சூழலியல் காட்சியமைப்பில், வடிவமைப்பாளர் இயற்கையுடனும் சமூகத்துடனும் 'இணை-ஆசிரியராக' மாறுகிறார். பாஸ் கெர்சாவ் தனது ஆய்வில், 'நாடகம் என்பது ஒரு சமூகச் சூழலியல் அமைப்பு' என்று குறிப்பிடுவதுபோல, அந்த நிலத்தில் என்ன கிடைக்கிறதோ அதனைக் கொண்டு வடிவமைப்பதே இதுவாகும் (Kershaw, 2007, p. 18). இது 'தொட்டில் முதல் தொட்டில் வரை' (Cradle to Cradle) என்ற நிலைபேறான வடிவமைப்புக் கொள்கையை நாடகத் திற்குள் கொண்டுவருகிறது.

### கொண்டாடல் (Celebration - Production)

இது நாடகம் நிகழ்த்தப்படும் நிலையாகும். இங்குப் பொருட்கள் மறைக்கப்படுவதில்லை. மாறாக, அவற்றின் பொருள்சார் தன்மை கொண்டாடப்படுகிறது. உதாரணமாக, ஒரு நாடகத்தில் பயன்படுத்தப்படும் பழைய பிளாஸ்டிக் போத்தல்கள், வர்ணம் பூசப்பட்டு மறைக்கப்படாமல், 'நான் ஒரு கழிவுப் பொருள், இப்போது கலையாக மாறியுள்ளேன்' என்று பார்வையாளனிடம்

பேசுவதே 'கொண்டாடல்' ஆகும். தெரசா மே குறிப்பிடுவது போல, 'சூழலியல் அரங்கு என்பது நமது சமூகத்திற்கும் பூமிக்கும் இடையிலான முறிந்துபோன உறவை மீண்டும் இணைக்கும் ஒரு சடங்கு' ஆகும் (May, 2005, p.85).

**சுழற்சி (Circulation - Post-production)**

இதுவே இக்கோட்பாட்டின் முக்கியமான பகுதியாகும். நாடக முடிவை ஒரு 'இறுதிப்புள்ளி' என்று கருதாமல், பொருட்களின் அடுத்த பயணத்திற்கான 'தொடக்கம்' என்று டான்யா பீர் கருதுகிறார். நாடகப் பொருட்கள் எரிக்கப்படுவதைத் தடுத்து, அவை சமூகத்திற்குப் பயன்படும் வகையில் மாற்றியமைப்பதை இது குறிக்கிறது. இதனை டான்யா பீர் 'மரபுரிமை' என்று அழைக்கிறார்(Beer, 2016, p.487). உதாரணமாக, 'தி லிவிங் ஸ்டேஜ்' (The Living Stage) என்ற தனது நாடகத் திட்டத்தில், டான்யா பீர் மேடையையே தோட்டமாக வடிவமைத்தார். நாடகம் முடிந்ததும் அந்த மேடை (செடிகள் மற்றும் மரக்கறிகள்) பார்வையாளர்களுக்கு உணவாகவும், கன்றுகளாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

இப்பகுதி, டான்யா பீரின் கோட்பாட்டைத் தமிழ் நாடகச் சூழலின் தரவுகளோடு ஒப்பிட்டு, உலகளாவிய அரங்கப் போக்குகளின் வெளிச்சத்தில் மிக விரிவாக விவாதிக்கின்றது.

## தமிழ் மரபில் 'இயற்கைசார் காட்சியமைப்பியல்'

மேற்கத்திய நாடுகள் இப்போது பேசும் 'சூழலியல் அறம்', தமிழர்களின் சடங்குசார் அரங்குகளில் இயல்பாகவே இருந்துள்ளது. இதனை டான்யா பீரின் 'இணை-உருவாக்கம்' கோட்பாட்டோடு ஆழமாக ஒப்பிட முடியும். ஈழத்து மற்றும் தமிழகக் கூத்து மரபுகளில், களரி அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் எவையும் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டவை அல்ல.

தமிழ் நாடகப் பரப்பைப் பொறுத்தவரை, சூழலியல் சார்ந்த மேடைப் பரிசோதனைகள் முன்னரே நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, மு. இராமசுவாமி மற்றும் சே. இராமானுஜம் போன்ற நாடக ஆளுமைகள் தமது நாடகங்களில் பனை ஓலைகள், மூங்கில் மற்றும் சணல் போன்ற இயற்கைப் பொருட்களை அழகியல் தேவைக்காகப் பயன்படுத்தியுள்ளனர் (இராமசுவாமி, 1995, ப.112). இருப்பினும், இம்முயற்சிகள் பெரும்பாலும் பண்பாட்டுத் தேவைக்காகச் செய்யப்பட்டனவேதவிர, அவை 'சூழலியல் காட்சியமைப்பியல்' எனும் கட்டமைக்கப்பட்ட கோட்பாட்டு நோக்கில் இது வரை ஆய்வு செய்யப்படவில்லை.

ஈழத்து மற்றும் தமிழகக் கூத்து மரபுகளில், களரி அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் எவையும் தொழிற் சாலைகளில் உருவாக்கப்பட்டவை அல்ல. அவை அந்தந்த நிலத்தில் கிடைக்கக்கூடிய பனை ஓலைகள், தென்னங்கீற்று, மூங்கில் கம்புகள் மற்றும் களிமண் ஆகியவையாகும் எனச் சிவத்தம்பி மற்றும் மௌனகுரு போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (மௌனகுரு, 1997, ப.46). கூத்து நிகழ்வு முடிவடைந்த பின்னர், இம்மேடைப் பொருட்கள் எவையும் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் கழிவுகளாக மாறுவதில்லை.

## பொருள்சார் குறியீடு

கூத்து மற்றும் கிராமிய வழிபாட்டு அரங்குகளில் பயன்படுத்தப்படும் பாக்கு மரம், வேப்பிலை, தோரணங்கள், வாழை மரங்கள் மற்றும் மஞ்சள் ஆகியவை வெறும் அலங்காரப் பொருட்கள் அல்ல. அவை 'புனிதத்தன்மை' மற்றும் 'சூழலியல் சிதைவு' (Biodegradability) ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் கொண்டவை. ரிச்சர்ட்

செக்னர் குறிப்பிடும் 'சடங்கு அரங்கின்' பண்புகள் தமிழ் கூத்தில் காணப்படுகின்றன (Schechner, 1988, p.120). இங்கு மேடை அமைப்பு என்பது அந்த நிலத்தின் விளைபொருளாகவே இருந்தது.

### வட்டப் பொருளாதாரம்

கூத்து நிகழ்வு முடிவடைந்த பின்னர், இம்மேடைப் பொருட்கள் எவையும் குப்பைகளாக மாறுவதில்லை. வாழை மரங்கள் கால்நடைகளுக்கு உணவாகின்றன பனை ஓலைகள் மற்றும் மூங்கில் கம்புகள் வீடுகளின் வேலி அடைப்பதற்கு அல்லது எரிபொருளாகப் மீளப்பயன்படுத்தப்பட்டன. சூரசம்ஹாரம் போன்ற நிகழ்வுகளில் உருவாக்கப்படும் சூரனின் உருவம் இறுதியில் அழிக்கப்படுகிறது, ஆனால் அந்த அழிவு சூழலுக்குத் தீங்கற்றது. இது நவீன உலகம் தேடிக்கொண்டிருக்கும் 'வட்டப் பொருளாதாரம்' (Circular Economy) என்ற கோட்பாட்டின் ஆதி வடிவமாகும். ஆனால், காலனித்துவத்திற்குப் பிந்தைய நவீன நாடக அரங்கின் வருகை, இந்த 'இயற்கை-மனித' இணைப்பைத் துண்டித்து, மேடையைச் 'செயற்கை உலகமாக' மாற்றியது.

### நவீனதமிழ் அரங்கின் 'பெட்ரோ-கெமிக்கல் அழகியல்'

இன்று தமிழ் நாடக அரங்கில் நாம் காண்பது, ஜேம்ஸ் தாம்சன் குறிப்பிடும் 'நுகர்வு கலாசாரத்தின் பிரதிபலிப்பு' ஆகும் (Thompson, 2009, p.6). இதனை 'பெட்ரோ -கெமிக்கல் அழகியல்'. (Petro-chemical Aesthetics) என்று இவ்வாய்வு விவாதிக்கிறது.

### பாலிஸ்டிரீன் ஆதிக்கம்

இங்கிலாந்தின் நாடகத் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி, ஒரு வருடத்திற்கு நாடகத் துறை உருவாக்கும் கழிவுகளின் அளவு, ஆயிரக்கணக்கான டன்களைத் தாண்டுகிறது (Julie's Bicycle, 2023, p.13). தமிழ் சூழலில், குறிப்பாகப் பாடசாலை மட்ட நாடகப் போட்டிகள் முதல் தேசிய நாடக விழாக்கள் வரை, மேடைப் பொருட்களில் 70-80%. பாலிஸ்டிரீன் (Rigid Foam) மற்றும் பிளாஸ்டிக் சார்ந்தவையே. இவை மேடைக்கு ஒரு பளபளப்பான, நிறைவு செய்யப்பட்ட தோற்றத்தைத் தருவதால் நெறியாளர்களால் விரும்பப்படுகின்றன. ஆனால், இவை மட்குவதற்குப் பல நூறு ஆண்டுகள் எடுக்கும். நாடக முடிவில் இவை உடைக்கப்பட்டு எரிக்கப்படும்போது வெளியாகும் நச்சுப் புகை சூழலை மாசுபடுத்துகிறது.

### முரண்பாடு

பல தமிழ் நாடகங்கள் 'மண் மீட்பு', 'விவசாயப் பாதுகாப்பு' அல்லது 'முதலாளித்துவ எதிர்ப்பு' பேசுகின்றன. ஆனால், அதே நாடகத்தின் மேடை வடிவமைப்பு, மண்ணை நஞ்சாக்கும் பாலிஸ்டிரீனால் செய்யப்பட்டுள்ளது. இந்த 'உள்ளடக்கத்திற்கும் வடிவத்திற்கும் இடையிலான அரசியல் முரண்' நவீன தமிழ் அரங்கில் கவனிக்கப்படாமலே உள்ளது.

### மாற்றீடான அழகியல் மற்றும் பொருளாதாரச் சாத்தியம்

சூழலியல் காட்சியமைப்பியலைத் தமிழ் அரங்கில் நடைமுறைப்படுத்துவது என்பது 'வறுமையின் அடையாளம்' அல்ல. அது ஒரு "புதிய அழகியல் புரட்சி" ஆகும். டான்யா பீரின் கோட்பாட்டைத் தமிழ் சூழலில் நடைமுறைப்படுத்துவது இரண்டு முக்கிய நன்மைகளைத் தரும்:

### பொருளாதாரச் சுமையைக் குறைத்தல்

ஒரு நவீன வரலாற்று நாடகத்தைத் தயாரிப்பதற்கு, பாலிஸ்டிரீன் மற்றும் செயற்கை வர்ணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி பெரியது. ஆனால், டான்யா பீரின் அணுகுமுறையில், பழைய பத்திரிகைகள்,

அட்டைப்பெட்டிகள், சணல் பைகள், மற்றும் உள்ளூர் மூங்கில் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது செலவு 60-70% குறைகிறது. இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடி மிக்க நாடுகளில், கலைத் தயாரிப்புச் செலவைக் குறைப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

### மேலுருவாக்கம் (Upcycling) தரும் அழகியல்

உலகப்புகழ் பெற்ற பிரேசில் கலைஞர் விக் முனிஸ் குப்பைகளைக் கொண்டு கலைப்படைப்புகளை உருவாக்குவதுபோல, தமிழ் நாடக மேடையிலும் கழிவுப் பொருட்களைக் கொண்டு வியக்கத்தக்க கலை வடிவங்களை உருவாக்க முடியும். உதாரணமாக, அரண்மனைத் தூணை உருவாக்குவதற்குப் புதிய ரெஜிபோம் வாங்குவதற்குப் பதிலாக, பழைய அட்டைப்பெட்டிகளை ஒன்றிணைத்து, அதன் மேல் களிமண் அல்லது மரத்தூள் கலந்த பசையைப் புசி, விளக்கொளியைப் பாய்ச்சும்போது, அது ரெஜிபோமை விடச் சிறந்த 'சொர சொரப்பான' வரலாற்றுத் தன்மையைக் கொடுக்கும். இதுவே 'குப்பையின் கவிதையியல்' ஆகும்.

### ஒப்பீட்டுப் பகுப்பாய்வு

இக்கோட்பாட்டின் நடைமுறைச் சாத்தியத்தை விளக்குவதற்கு, 'சிம்மாசனம்' ஒன்றை வடிவமைக்கும் முறையை ஒப்பிடுவோம்:

#### வழக்கமான முறை

பாலிஸ்டிரீன் கட்டிகளைச் செதுக்கி, அதன் மேல் இரசாயனத் தங்க வர்ணம் பூசப்படும். இது பார்ப்பதற்குத் தத்ரூபமாக இருந்தாலும், நாடகம் முடிந்தவுடன் இது உடைக்கப்பட்டு குப்பையாகும். மறுசுழற்சி செய்ய முடியாது. செலவு அதிகம்.

#### சூழலியல் காட்சியமைப்பு முறை

பழைய இரும்பு நாற்காலி அல்லது மரக்கட்டைகள் அடிப்படையாகக் கொள்ளப்படும். அதன் மேல் பழைய சணல் சாக்குகள் அல்லது துணிகள் கலைநயத்துடன் சுற்றப்படும். கயிற்றினால் பின்னலிடப்படும். இது ஒரு தனித்துவமான 'மண் வாசனை' கலந்த அழகியலைத் தரும். நாடகம் முடிந்தவுடன், சணல் சாக்குகள் கழற்றப்பட்டுத் தோட்ட வேலைக்குப் பயன்படுத்தப்படும். நாற்காலி மீண்டும் பயன்பாட்டிற்கு வரும். இங்கு கழிவு பூச்சியமாக்கப்படுகிறது.

### கண்டறியப்பட்ட முடிவுகள்

மேற்கொள்ளப்பட்ட விரிவான பகுப்பாய்வின் அடிப்படையில் பின்வரும் முக்கிய முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன:

**மரபின் மீள்வருகை**

டான்யா பீரின் 'சூழலியல் காட்சியமைப்பியல்' கோட்பாடானது நவீனத் தமிழ் நாடக உலகுக்குப் புதிய மேலைத்தேய இறக்குமதியாகத் தோன்றினாலும், அதன் ஆன்மா தமிழர்களின் மரபுவழி அரங்குகளான கூத்து மற்றும் கிராமியக் கலைகளின் இயல்பிலேயே ஏற்கனவே பொதிந்துள்ளது. எனவே, இக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவது என்பது நவீனத்துவத்தின் பெயரில் நாம் இழந்த சூழலியல் மரபை மீட்டெடுப்பதே ஆகும்.

### பொருளாதாரத் தீர்வு

அதிக செலவு பிடிக்கும், இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை மேடைப் பொருட்களுக்குப் பதிலாக, உள்ளூரில் கிடைக்கக்கூடிய மற்றும் மட்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துவதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. இது குறைந்த நிதி வசதி கொண்ட தமிழ் நாடகக் குழுக்களுக்கும், மாணவர் அரங்குகளுக்கும் பொருளாதார ரீதியாகப் பெரும் பயனளிக்கக்

கூடியது. குறைந்த செலவில் நிறைந்த கலை என்பதை இது சாத்தியமாக்குகிறது.

### அழகியல் மாற்றம்

சூழலியல் பொருட்களைப் பயன்படுத்துவது நாடகத்தின் அழகியலைக் குறைக்கும் என்ற பொதுவான அச்சத்தை இவ்வாய்வு தரவுகளுடன்மறுக்கிறது. மாறாக, மறுசுழற்சி மற்றும் மேலுருவாக்கம் செய்யப்பட்ட பொருட்கள், மேடைக்கு ஒரு தனித்துவமான 'பொருள்சார் அழகியலை' வழங்குகின்றன. இது பார்வையாளர்களுக்கு ஒரு புதிய காட்சியனுபவத்தைக் கொடுக்கிறது.

### முடிவுரையும் பரிந்துரைகளும்

மேடைக்கு அப்பால் விரியும் பரந்த சமூகப் பொறுப்பை நாடகக் கலை ஏற்க வேண்டியதன் அவசியத்தை இவ்வாய்வு வலியுறுத்துகிறது. டான்யா பீரின் 'சூழலியல் காட்சியமைப்பியல்' கோட்பாட்டின் ஊடாகத் தமிழ் நாடக அரங்கின் கடந்த காலத்தையும், நிகழ்காலச் சவால்களையும், எதிர்காலச் சாத்தியங்களையும் இவ்வாய்வு ஒருங்கிணைத்துப் பார்த்தது. 'கழிவற்ற அரங்கு' என்பது ஒரு கற்பனாவாதம் இல்லை. அது குறைந்த செலவில், நிறைந்த அழகியலை வழங்குவதோடு மட்டுமல்லாமல், சமூகத்திற்குச் சூழலியல் விழிப்புணர்வூட்டும் காத்திரமான ஊடகமாகவும் நாடகத்தை மாற்றியமைக்கிறது.

### பரிந்துரைகள்

இவ்வாய்வின் அடிப்படையில், தமிழ் நாடகத் துறையின் எதிர்கால வளர்ச்சி கருதிப் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன:

### கல்விப்புல மாற்றம்

பல்கலைக் கழகங்கள் மற்றும் நுண்கலைக் கல்லூரிகளின் நாடகப் பாடத்திட்டங்களில், 'சூழலியல் வடிவமைப்பு' கட்டாயப் பாடப்பரப்பாகச் சேர்க்கப்பட வேண்டும். மாணவர்கள் இயற்கை வளங்கள் மற்றும் கழிவுப் பொருட்களைக் கொண்டு மேடையமைக்கும் நுட்பங்களைக் கற்க இது வழிவகுக்கும்.

### பசுமை நெறிமுறைகள்

அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் நாடகப் போட்டிகள் மற்றும் விழாக்களில், 'பசுமை நெறிமுறைகள்' அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேடை வடிவமைப்பில் பாலிஸ்டிரீன் பயன்பாட்டைத் தவிர்த்து, சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத பொருட்களைப் பயன்படுத்தும் நாடகக் குழுக்களுக்கு, மதிப்பீட்டில் மேலதிகப் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

### பொருள் சேமிப்பு வங்கி

பிரதேச மட்டத்தில் இயங்கும் நாடகக் குழுக்கள் ஒன்றிணைந்து, நாடகத்திற்குப் பயன்படுத்திய பொருட்களைப் பாது காக்கும் 'பொதுக் களஞ்சியம்' ஒன்றை உருவாக்க வேண்டும். ஒரு நாடகத்திற்குப் பயன்படுத்திய உடையையோ அல்லது மேடைப் பொருளையோ, இடித்து எறியாமல் மற்றுமொரு நாடகக் குழு பயன்படுத்துவதற்கு இது வாய்ப்பளிக்கும்.

### உசாத்துணை

1. Ramaswamy, M. (1995). Tamil Nadagam: Netrum Indrum [Tamil Drama: Yesterday and Today]. Chennai: Kalaignan Pathippagam.
2. Mounaguru, S. (1997). Eezhathu Tamil Nadaga Arangu [Eelam Tamil Theatre]. Colombo: Kumaran Book House.
3. Beer, T. (2016). Ecoscenography: An Introduction to the Art of Scenography for a More-Than-Human World. Broadview Press.
4. Beer, T. (2021). Ecoscenography: An Introduction to the Art of Scenography for a More-Than-Human World. Palgrave Macmillan.

5. Bennett, J. (2010). Vibrant Matter: A Political Ecology of Things. Duke University Press.
6. Chaudhuri, U. (1994). "There Must Be a Lot of Fish in That Lake": Toward an Ecological Theater. Theater, 25(1), 23-31.
7. Julie's Bicycle. (2023). Culture Change: Climate impacts of the UK theatre sector. London: Arts Council England.
8. Kershaw, B. (2007). Theatre Ecology: Environments and Performance Events. Cambridge University Press.
9. May, T. J. (2005). Greening the Stage: Sustainable Production Practices and Ecological Values in American Theatre. (Doctoral dissertation, University of Washington).
10. McKinney, J., & Palmer, S. (2012). Scenography Expanded: An Introduction to Contemporary Performance Design. Bloomsbury Methuen Drama.
11. Schechner, R. (1988). Performance Theory. Routledge.
12. Thompson, J. (2009). Performance Affects: Applied Theatre and the End of Effect. Palgrave Macmillan.